செ. குறிப்பு; 32

# பயிற்சி மருத்துவர்கள் தொடர்ந்து போராட்டம் நடத்துவது சரிதானா?

## மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பன்னீர்செல்வம் விளக்கம்.

06.07.09

அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளில் பணியாற்றி வரும் பயிற்சி மருத்துவர்கள், மற்றும் பட்ட மேற்படிப்பு மாணவர்கள் தங்களின் உதவித் தொகையை உயர்த்துமாறு கோரி – வகுப்புகளையும், பயிற்சி களையும் புறக்கணித்து தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். ஆனால் இவர்கள் போராட்டம் தொடங்குவதற்கு முன்பாகவே, இவர்களின் கோரிக்கை குறித்து அரசு பரிசீலனை செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 3–7–2009 அன்றே கையெழுத்திட்ட கோப்பில் –

இதுவரை 4,500 ரூபாய் உதவித் தொகை பெற்று வந்தவர்களுக்கு 6,000 ரூபாய் என்றும் –

இதுவரை 8,500 ரூபாய் உதவித் தொகை பெற்று வந்தவர்களுக்கு 13 ஆயிரம் ரூபாய் என்றும் –

இதுவரை 9,000 ரூபாய் உதவித் தொகை பெற்று வந்தவர்களுக்கு 14 ஆயிரம் ரூபாய் என்றும் –

இதுவரை 9,500 ரூபாய் உதவித் தொகை பெற்று வந்தவர்களுக்கு 15 ஆயிரம் ரூபாய் என்றும் –

இதுவரை 10,000 ரூபாய் உதவித் தொகை பெற்று வந்த சிறப்பு மருத்துவ பட்ட மேற்படிப்பு பயிலும் இரண்டாமாண்டு மாணவர்களுக்கு 16 ஆயிரம் ரூபாய் என்றும் – மூன்றாமாண்டு மாணவர்களுக்கு 17 ஆயிரம் ரூபாய் என்றும் – நான்காமாண்டு மாணவர்களுக்கு 15 ஆயிரம் ரூபாய் என்றும் – ஐந்தாம் ஆண்டில் 16 ஆயிரம் ரூபாய் என்றும் 1–7–2009 அன்று முதல் வழங்கிட உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

மேலும், மருத்துவப் பட்டப் படிப்பு பயிற்சி மாணவர்களுக்கு மாதம் 300 ரூபாய், பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கும், பட்ட மேற்படிப்பில் சிறப்புப் பிரிவு பயிலும் மாணவர்களுக்கும் ஒவ்வொரு ஆண்டிலும் மாதம் 600 ரூபாய் என கூடுதலாக வழங்கிடவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இந்த மாணவர்களுக்கு வழங்கப் படுவது ஊதியமல்ல, அவர்கள் படிக்கின்ற நேரத்தில் வழங்கப்படும் உதவித் தொகையே ஆகும். அந்த உதவித் தொகையை இந்த அளவிற்கு உயர்த்திய பிறகும் தான் அவர்கள் போராட்டம் நடத்துகிறார்கள்.

தனியார் மருத்துவக் கல்லூரிகளில் பயிலும் பயிற்சி மாணவர் களுக்கு சுமார் 2000 ரூபாய் அளவிற்கு மட்டுமே இந்த உதவித் தொகை வழங்கப்படுகின்றது. அது மாத்திரமல்ல, தனியார் மருத்துவக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் இலட்சக்கணக்கான ரூபாய் கட்டணமாக செலுத்தி பயின்று வருகின்ற நேரத்தில், அரசு மருத்துவக் கல்லூரிகளில் இந்த மாணவர்கள் பயிலுவதற்காக ஒரு சில ஆயிரம் ரூபாய்கள் மட்டுமே கட்டணமாக வசூலிக்கப்படுகிறது என்பதும் – ஒரு மாணவர் ஒருவர் முழுவதுமாக படித்து வெளியே வர சுமார் மூன்று இலட்சம் ரூபாய் அரசாங்கத்தின் சார்பிலே செலவழிக்கப்படுகிறது என்பதும் நினைவிலே கொள்ள வேண்டிய குறிப்புகளாகும்.

நல்லெண்ணத்தோடும், பயிற்சி மாணவர்களுக்கு உதவிட வேண்டு மென்ற தூய நோக்கத்தோடும் தமிழக அரசின் சார்பில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்த அளவிற்கு உதவித் தொகையை உயர்த்திக் கொடுத்த பிறகும், ஒரு சிலரின் தூண்டுதல் காரணமாக பயிற்சி மாணவர்கள் தொடர்ந்து போராடுவது என்பது சரிதானா என்பதை நாட்டு மக்கள் தான் கவனத்திலே கொள்ள வேண்டும்.

இவ்வளவிற்குப் பிறகும், அவர்கள் தங்களது போராட்டத்தைத் தொடருவார்களேயானால் – இந்திய மருத்துவக் கழகத்தின் மருத்துவக் கல்லூரியின் ஆய்வின் போது, இப்பயிற்சி மாணவர்களின் நிலை குறித்த

அதிகார பூர்வ அறிக்கை சமர்ப்பிக்கப்படும் நேரத்தில் – இவர்கள் நடத்திய போராட்டம் குறித்த நிலை தெரிவிக்கப்படுமேயானால், அது அவர்களது சான்றிதழ் மற்றும் மேற்படிப்புக்கு பாதகமான நிலையை ஏற்படுத்தும் என்பதை உணர்ந்து அவர்கள் தங்களது நலனை முன்னிட்டு உடனடியாக பணிக்குத் திரும்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

................................................................................



வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை.
தலைமைச் செயலகம், சென்னை-9